**P5 SA2**

**COMPOSITION**

இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்கவும். இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் மொத்தம் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

***வினா 1***

***நான் பள்ளிக்குப் பெருமை தேடித் தந்த ஒரு சம்பவம்***

மேற்கண்ட தலைப்பில் ***100 சொற்களுக்குக் குறையாமல்*** ஒரு கட்டுரை / கதை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.

- அச்சம்பவம் எப்போது, எங்கே நிகழ்ந்தது
- எவ்வாறு பள்ளிக்குப் பெருமை தேடித் தந்தாய்
- உன் சக மாணவர்கள் உன்னிடமிருந்து என்ன கற்றுக்கொண்டார்கள்
- உன் பள்ளி உன்னை எவ்வாறு பாராட்டியது




கைச்செலவுக்கான பணம்

வகுப்புத்தோழன் கவலையாகக் காணப்பட்டான்

வாங்க விரும்பினாள்

தூக்கிப் போட

அம்மா தயாரித்த உணவு

பலவகையான உணவு

மகிழ்ச்சியாக்

நினைத்துப் பார்த்தாள்

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

## 'அ' பிரிவு

### A1 வேற்றுமை

**Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.** **(12 மதிப்பெண்கள்)**

அரசன் ஒருவன் மக்களைக் காண அமைச்சர்களுடன் சென்றான். இதனால், மக்கள் தங்களிடம் இருந்த (Q1)__________ நல்லது ஒன்றை அணிந்து கொண்டனர். மக்கள் சுகமாக வாழ்வதைக் கண்டு (Q2) __________ மகிழ்ச்சி அடைந்தான்.

மாலையில், அரசன் (Q3) __________ உரையாடினான். அப்போது, ஓர் அமைச்சர், "அரசே! நாட்டு மக்களின் உண்மையான (Q4) __________ பற்றி அறிய நீங்கள் நாளை மாறுவேடத்தில் செல்லுங்கள்," என்றார்.

மறுநாள், அரசன் பிச்சைக்காரன் வேடத்தில் (Q5) __________ சென்றான். மக்கள் கந்தல் ஆடைகளை உடுத்தியிருந்தனர். சில ஏழைப் பெண்கள் உண்ண உணவில்லாமல் தங்கள் (Q6) __________ புலம்பிக் கொண்டிருந்தனர். இவற்றைக் கண்ட அரசன் அதிர்ச்சியில் என்ன செய்வதென்று தெரியாமல் நின்றான்.

Q1
(1) ஆடைகளோடு
(2) ஆடைகளில்
(3) ஆடைகளை ( )
(4) ஆடைகளின்

Q2
(1) அரசனால்
(2) அரசனுடைய
(3) அரசன் ( )
(4) அரசனுக்கு

Q3
(1) அமைச்சர்களை
(2) அமைச்சர்களோடு
(3) அமைச்சர்களால் ( )
(4) அமைச்சர்களே

Q4
(1) வாழ்க்கையே
(2) வாழ்க்கைக்கு
(3) வாழ்க்கையின் ( )
(4) வாழ்க்கையை

Q5
(1) கிராமத்தின்
(2) கிராமத்திற்கு
(3) கிராமத்தை ( )
(4) கிராமத்திலிருந்து

Q6
(1) கணவர்களிடம்
(2) கணவர்களிடமிருந்து
(3) கணவர்களின் ( )
(4) கணவர்களுடைய

## A2 செய்யுள் / பழமொழி

**Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்காக ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

**(12 மதிப்பெண்கள்)**

Q7 இளமையில் ______________ முதுமையில் வறுமை.
(1) கல்வி
(2) சோம்பல்
(3) கற்றல்
(4) சோர்வு
( )

Q8 ______________ விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்
(1) அணைகிற
(2) ஏந்துகிற
(3) ஒளிர்கிற
(4) எரிகிற
( )

Q9 காலத்தி னாற்செய்த நன்றி ______________
ஞாலத்தின் மாணப் பெரிது.
(1) சிறிதெனினும்
(2) பெரிதெனினும்
(3) இருப்பினும்
(4) சிறிதளவேனும்
( )

Q10 அன்பிலார் ______________ தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு.
(1) எல்லாரும்
(2) எவரும்
(3) எதனையும்
(4) எல்லாம்
( )

Q11 சுடினும் செம்பொன் ______________ கெடாது.
(1) மின்னொளி
(2) சுடரொளி
(3) தன்னொளி
(4) பளபளப்பு
( )

Q12 ______________ செய்பவர் படாது படுவர்.
(1) தகாதது
(2) அடாது
(3) கேளாது
(4) ஆகாதது
( )

# B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்



**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

ஒரு சமயம் அரசர் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தபோது தெனாலிராமன் எப்போதும் போலத் தனது குறும்புத்தனத்தைக் காட்டிவிட்டான். அதனால், அரசர் மிகவும் கோபம் கொண்டார். அவர் தம் சேவகர்களிடம் தெனாலிராமனைப் பூமியில் புதைத்து, அவன் தலையை யானையைக்கொண்டு மிதிக்கும்படிக் கட்டளை இட்டார். தண்டனையை நிறைவேற்றுவதற்காகச் சேவகர்கள் தெனாலிராமனைக் காட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே ஆழமான குழியைத் தோண்டி தெனாலிராமனை அதில் இறக்கினார்கள். பின் அவன் கழுத்துவரை மண்ணை நிரப்பி அக்குழியை மூடினார்கள். பிறகு பட்டத்து யானையை அழைத்துவரச் சென்றார்கள்.

சேவகர்கள் சென்ற சிறிது நேரத்தில் அங்கு ஒரு கூனன் வந்தான். தெனாலிராமன் அவனைத் தன் அருகில் அழைத்தான். அவனும், ``என்ன?`` என்று கேட்டான். அதற்குத் தெனாலிராமன், ``நானும் உன்னைப் போல் கூனனாகத்தான் இருந்தேன். அதனால், என் நண்பர்கள் என்னை நேராக நிற்க வைத்துக் கழுத்துவரைப் புதைத்து வைத்தனர். இப்போது என்னுடைய கூன் நிமிர்ந்து விட்டதைப் போல் உணர்கிறேன். தயவு செய்து என்னைச் சற்று வெளியில் கொண்டுவர முடியுமா?`` என்று கனிவு கலந்த குரலில் கேட்டான். தெனாலிராமனின் சூழ்ச்சியை அறியாத கூனன், மண்ணைத் தோண்டி அவன் வெளியே வர உதவினான்.

தெனாலிராமன் தன் கூன் நிமிர்ந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டதைப் போல் நடித்தான். அதைக் கண்டதும் அந்த அப்பாவிக் கூனன் தன்னுடைய கூனையும் நிமிர்த்திக் கொள்ள மிகவும் விரும்பினான். எனவே, அவன் தன்னையும் குழியில் இறக்கிப் புதைக்குமாறு தெனாலிராமனிடம் கேட்டுக் கொண்டான். உடனே கூனனின் ஆசையை நிறைவேற்றுவதாகக் கூறி அவனைக் குழியில் இறக்கிப் புதைத்துவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றான், தெனாலிராமன்.

யானையுடன் திரும்பி வந்த அரசரின் வேலையாட்கள் குழியிலிருந்தவனைக் கண்டு திகைத்துப் போயினர். உண்மையை அறிந்த வேலையாட்கள் நடந்தவற்றை மன்னரிடம் முறையிட்டனர். என்னதான் மன்னருக்குத் தொனாலிராமன் மீது கோபம் இருந்தாலும், அவர் அவனுடைய புத்திசாலித்தனத்தை எண்ணி மலைத்தார். இறுதியில் அவனை மன்னித்து விடுதலை செய்தார்.

**Q13** முதல் **Q17** வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. **(10 மதிப்பெண்கள்)**

Q13. அரசர் தெனாலிராமனுக்கு என்ன தண்டனையை அளித்தார்?

(1) தெனாலிராமனை ஆழமான குழியில் தள்ளிப் புதைக்க வேண்டும்
(2) தெனாலிராமனின் கழுத்தை யானை மிதிக்க வேண்டும்
(3) புதைக்கப்பட்ட தெனாலிராமனின் தலையை யானை மிதிக்க வேண்டும்
(4) யானையால் கொல்லப்பட்ட தெனாலிராமனின் தலையைப் புதைக்க வேண்டும்

( )

Q14. சேவகர்கள் எங்கே சென்றார்கள்?

(1) காட்டு யானையை அழைத்து வர
(2) பட்டத்து யானையை அழைத்து வர
(3) கூனனை அழைத்து வர
(4) தெனாலிராமனை அழைத்து வர

( )

Q15. தெனாலிராமன் குழியில் இருந்ததற்கு என்ன காரணத்தைக் கூறினான்?

(1) அரசன் தன்னைத் தண்டித்ததற்காக
(2) நண்பனின் வேண்டுகோளுக்காக
(3) சேவகர்கள் தன்னைக் குழியில் புதைத்ததற்காக
(4) தன் கூன் நிமிர்வதற்காக

( )

Q16. குழியிலிருந்து வெளியே வந்ததும் தெனாலிராமன் என்ன செய்தான்?

(1) கூன் நிமிர்ந்து விட்டதைப் போல் நடித்தான்
(2) கூன் நிமிர்ந்ததைக் கண்டு வியந்தான்
(3) கூனனின் ஆசையைக் கேட்டறிந்தான்
(4) கூனனைக் குழியில் புதைத்தான்

( )

Q17. நடந்தவற்றை அறிந்த மன்னர் என்ன செய்தார்?

(1) தெனாலிராமனுக்குப் பரிசளித்தார்
(2) திகைப்படைந்து தெனாலிராமனைப் பாராட்டினார்
(3) திகைப்படைந்து தெனாலிராமனை மன்னித்தார்
(4) வியப்படைந்து தெனாலிராமனைக் காப்பாற்றினார்

( )

## B4 சொற்பொருள்

**Q18** முதல் **Q20** வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

**(6 மதிப்பெண்கள்)**

Q18 கட்டளை

(1) பணி
(2) ஆணை
(3) தண்டனை
(4) முறை

( )

Q19 சூழ்ச்சியை

(1) எண்ணத்தை
(2) வல்லமையை
(3) தந்திரத்தை
(4) ஆற்றலை

( )

Q20 நிறைவேற்றுவதாக

(1) பூர்த்திச் செய்வதாக
(2) ஏற்றுக் கொள்வதாக
(3) நிராகரிப்பதாக
(4) ஆமோதிப்பதாக

( )

**B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.

# மாயா பயண நிறுவனம் ஏற்பாட்டில்.. ..

ஜனவரி 15 முதல் 22-ம் தேதி வரை சென்னையில் உள்ள மால்குடி கிராமத்தில் தங்கிக் கிராமிய வாழ்க்கை முறையை அனுபவிக்க வாருங்கள்! கட்டணம் $2800 மட்டுமே.



- நான்கு மணி நேரப் படகுப் பயணம் வழி பெரிய ஏரிகளைச் சுற்றிப் பார்க்கலாம்
- ஏரியில் மீன் பிடிக்கும் அனுபவத்தையும் பெற வாய்ப்பு உண்டு
- இலவசக் காலை உணவும் வழங்கப்படும்

- பல்லக்கில் ஏறிச் செல்லும் அரச உபசரிப்பை நீங்களும் அனுபவிக்க ஓர் அரிய வாய்ப்பு.
- காலை 10 முதல் மதியம் 3 வரை இந்தச் சேவை வழங்கப்படும்
- பல்லக்கில் அமர்ந்திருக்கும் காட்சி இலவசப் புகைப் படமாக எடுத்துத் தரப்படும்.





பறவைகளின் இருப்பிடத்தைக் காணவும் பறவைகளுக்குத் தீனி அளிக்கவும் ஒரு நாள் போதாது! அப்படிப்பட்ட அழகைக் காணத் தவறாதீர்கள்!



மாட்டுப் பொங்கலையும் இங்கேயே கொண்டாடி மகிழ உங்கள் குடும்பத்துடன் வாருங்கள்!



→ பயண ஏற்பாட்டுக்கு ராஜனுடன் தொடர்புகொள்ள 91010109 என்ற எண்ணை அழையுங்கள்.

**Q21** முதல் **Q23** வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

(6 மதிப்பெண்கள்)

21. மாயா பயண ஏற்பாட்டின் நோக்கம் என்ன?
    (1) சுற்றுப்பயணிகள் அரச உபசரிப்பைப் பெறுவது
    (2) சுற்றுப்பயணிகள் மீன் பிடிக்கக் கற்றுக்கொள்வது
    (3) சுற்றுப்பயணிகள் கிராமிய வாழ்க்கை முறையை அறிந்துகொள்வது
    (4) சுற்றுப்பயணிகள் பல்லக்கில் ஏறிச் செல்லும் அனுபவம் பெறுவது

( )

22. இந்தப் பயணத்தின் இலவசச் சலுகைகள் யாவை?
    (1) மீன் பிடிப்பதும் படகில் பயணம் செய்வதும்
    (2) பறவைகளைப் பார்ப்பதும் அவற்றிற்குத் தீனி அளிப்பதும்
    (3) பல்லக்கில் செல்வதும் புகைப்படம் எடுப்பதும்
    (4) படகில் உண்பதும் பல்லக்கில் புகைப்படம் எடுப்பதும்

( )

23. எந்தக் கொண்டாட்டத்திற்கு மால்குடி கிராமம் ஏற்றது?
    (1) அரசர் திருமணம்
    (2) மாட்டுப் பொங்கல்
    (3) படகோட்டப் போட்டி
    (4) தைப் பொங்கல்

( )

**Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.**

## 'ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. **(10 மதிப்பெண்கள்)**

**Q24** அடுத்த வாரம், பாலா சாரணர் முகாமிற்குச் செல்ல இருக்கிறான். அவன் தனக்குத் தேவையான __________ பொருள்களையும் பையில் எடுத்து வைப்பான். **Q24 (   )**

**Q25** அன்று பொங்கல் திருநாள். என் தாயார் எங்கள் வீட்டு வாசலில் அழகிய __________ ஒன்றை வரைந்தார். **Q25 (   )**

**Q26** வானத்தில் __________ கழுகை வேடன் குறி வைத்துச் சுட்டான். **Q26 (   )**

**Q27** நேற்று விரைவுச்சாலையில் ஒரு விபத்து ஏற்பட்டிருந்தது. அதைக் கண்ட பொதுமக்கள் 999 என்ற தொலைபேசி __________ தொடர்பு கொண்டனர். **Q27 (   )**

**Q28** ஆதிகால மனிதன் மிருகங்களின் __________ ஆடையாகப் பயன்படுத்தினான். இன்றும் மனிதன் அதைப் பயன்படுத்திப் பல பொருள்களைச் செய்கிறான். **Q28 (   )**

| | | | |
|---|---|---|---|
| (1) | அணைத்து | (2) | பரந்த |
| (3) | தோலை | (4) | அனைத்து |
| (5) | எண்ணுடன் | (6) | தோளை |
| (7) | என்னுடன் | (8) | கோலம் |
| (9) | பறந்த | (10) | கோளம் |

D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் **Q29** முதல் **Q35** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட் இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

(14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| குடியானவன் ஒருவன் தன் வீட்டில் ஒரு வாத்தையும் ஓர் அன்னத்தையும் வளர்த்து வந்தான். அன்னம் தன் இனிய குரலில் பாடும். அதைக் கேட்டுக் குடியானவன் மகிழ்வான். அவன் வாத்துக்கு நன்கு தீனி போட்டு வளர்த்து வந்தான். ஆனால், வாத்து (Q29)__________ ஒருநாள் அறுத்துச் சமைப்பதற்காகவே வளர்க்கப்பட்டது. | Q29.(  ) |
| ஒருநாள் குடியானவன் வீட்டில் (Q30)__________ ஒன்று நடக்கவிருந்தது. | Q30.(  ) |
| அதனால் அன்று அதிகாலையில் குடியானவன் வாத்தைப் பிடித்து (Q31)__________ நினைத்தான். | Q31.(  ) |
| விடியற்காலையில் இருட்டாக இருந்ததால், வாத்தைப் பிடிப்பதற்கு (Q32)__________ குடியானவன் அன்னத்தைப் பிடித்தான். | Q32.(  ) |
| தனக்கு ஆபத்து வந்ததை அன்னம் அறிந்துகொண்டது. தன் தலை (Q33)__________ முன் எப்படியாவது தப்பிவிட வேண்டும் என்று நினைத்தது. | Q33.(  ) |
| உடனே வழக்கம்போல் தன் (Q34)__________ குரலில் பாடியது. | Q34.(  ) |
| அதைக் கேட்ட குடியானவன் தான் வாத்துக்குப் பதில் அன்னத்தைப் பிடித்திருப்பதை (Q35)__________, அன்னத்தை விட்டுவிட்டு வாத்தைப் பிடித்து வெட்டினான். அன்னம் தனது இனிய குரல் தன் உயிரைக் காப்பாற்ற உதவியதை எண்ணி மகிழ்ந்தது. | Q35.(  ) |

| | | |
|---|---|---|
| 1. பதிலாக | 5. என்றாவது | 9. அறுக்க |
| 2. நெறிக்கப்படுவதற்கு | 6. முன்பாக | 10. கண்டதும் |
| 3. விருந்து | 7. இனிமையான | 11. வெட்டப்படுவதற்கு |
| 4. உணர்ந்து | 8. கனிவான | 12. அடைக்க |

## D8 சுயவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

விறகுவெட்டியான சங்கரனுக்குப் பல நல்ல குணங்கள் இருந்தன. அவனுக்குக் கோபம் வராது ; பொறாமையும் கிடையாது. ~~அவன்~~ யாரிடமும் கடனும் வாங்க மாட்டான் ; பொய் சொல்வதை அறவே வெறுத்தான். அவன் செல்வந்தனாக வாழாவிட்டாலும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான்.

கிராமத் தலைவரிடம் ஊரில் உள்ளவர்கள் ஏதாவது ஒரு வகையில் உதவியைப் பெற்று வந்தனர். ஆனால், சங்கரன் மட்டும் அவரிடம் எந்த உதவியையும் கேட்டுப் போனதில்லை. அது அவருக்கு எரிச்சலையும் கோபத்தையும் அளித்தது. ஒரு நாள் அவரே சங்கரனை அழைத்துச், ``சங்கரா, ஊரிலுள்ள அனைவரும் என் உதவியைப் பெறத் தவம் இருக்கின்றனர். ஆனால், நீ மட்டும் இதுவரை என்னிடம் உதவி கேட்டு வந்ததேயில்லையே. அதற்கென்ன காரணம்?`` என்று வினவினார்.

சங்கரன் அடக்கமாக, ``உங்கள் உதவியை எதிர்பார்த்து வராததற்கு எதுவும் காரணமல்ல ; நான் எளிமையாக வாழ்கிறேன்,`` என்றான். ``அப்படியா! நீ என் தயவை எதிர்பார்த்து வரக்கூடிய காலம் விரைவிலேயே வரும். அப்போது உன்னைக் கவனித்துக் கொள்கிறேன், `` என்று சவால் விட்டார் கிராமத் தலைவர்.

ஒருநாள் கிராமத் தலைவர் அனுப்பிய முரடன், தெருவில் விறகுக்கட்டுடன் போய்க்கொண்டிருந்த சங்கரனை அடித்துப் போட்டான். பிறகு, சங்கரனுடைய விறகுக் கட்டைத் தூக்கிக்கொண்டு போனான். அதையெல்லாம் மறைந்து நின்று பார்த்துக்கொண்டிருந்தார் கிராமத் தலைவர். அவர் வலியில் துடித்துக்கொண்டிருந்த சங்கரனிடம், ``சங்கரா! யாரோ ஒருவன் உன் விறகுக்கட்டைத் தூக்கிக்கொண்டு போகிறானே! அவனைக் கூப்பிட்டு விசாரிக்கட்டுமா?`` என்று ஒன்றும் தெரியாதவர் போல் கேட்டார். ``வேண்டாம்! அவன் என்னைவிட ஏழையாக இருப்பான் என்று எண்ணுகிறேன். அதை விற்றுக் கிடைக்கும் பணத்தை அவன் செலவுக்கு வைத்துக்கொள்ளட்டும்,`` என்றான் சங்கரன். ``சங்கரா! நான் உன்னிடம் தோற்றுவிட்டேன். உன்னைப் போன்ற நற்குணமுடையவனை என்னைப் போன்ற ஆணவக்காரனால் வெல்லமுடியாது,`` என்றார் கிராமத் தலைவர்.

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கொண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது.

(20 மதிப்பெண்கள்)

36. சங்கரனிடம் காணப்பட்ட நற்பண்புகள் யாவை? (4 ம.பெ)

37. சங்கரன் ஊர் மக்களினின்று எப்படி மாறுபட்டிருந்தான்? (4 ம.பெ)

38. சங்கரன் கிராமத் தலைவரின் உதவியை நாடாததற்கு எது காரணம் என்று கூறினான்? (3 ம.பெ)

39. தெருவில் சென்ற சங்கரனுக்கு என்ன நிகழ்ந்தது? (2 ம.பெ)

40. சங்கரன் ஏன் முரடனை விட்டு விட்டான்? (4 ம.பெ)

41.கிராமத்தலைவர் கற்றுக்கொண்ட பாடம் என்ன? (3 ம.பெ)

P 5

# P5 SA2
# TESTPAPER 7

அரசன் ஒருவன் மக்களைக்...

1)2 2)3 3)2 4)4 5)2 6)1 7)2 8)4 9)1 10)4 11)3 12)2

13)3 14)2 15)4 16)1 17)3 18)2 19)3 20)1 21)3 22)4 23)2

24)4 25)8 26)9 27)5 28)3 29)5 30)3 31)9 32)1 33)11

34)7 35)4

36)சங்கரனுக்கு கோபம் வராது.பொறாமையும் கிடையாது.யாரிடமும் கடனும் வாங்க மாட்டான். மேலும் பொய் சொல்வதை அறவே வெறுத்தான்.இவையே அவனிடம் காணப்பட்ட நற்பண்புகள் ஆகும்.

37)கிராமத்தலைவரிடம் ஊரில் உள்ளவர்கள் ஏதாவது ஒரு வகையில் உதவியைப் பெற்று வந்தனர்.ஆனால் சங்கரன் அவரிடம் எந்த உதவியையும் கேட்டுப் போனதில்லை.இவ்வாறு தான் சங்கரன் ஊர் மக்களினின்று மாறுபட்டு இருந்தான்.

38)சங்கரன் தான் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்ததே கிராமத்தலைவரின் உதவியை நாடாததற்குக் காரணம் என்று கூறினான்.

39)தெருவில் சென்ற சங்கரனை கிராமத்தலைவர் அனுப்பிய முரடன் அடித்துப் போட்டான். அவன் சங்கரனுடைய விறகுக் கட்டையும் தூக்கிக் கொண்டு போனான்.

40)சங்கரன் முரடன் தன்னைவிட ஏழையாக இருப்பான் என்று நினைத்தான். அதனால் விறகுக்கட்டை விற்றுக் கிடைக்கும் பணத்தை அவன் தன் செலவுக்கு வைத்துக் கொள்ளட்டும் என்ற காரணத்தினாலேயே முரடனை விட்டு விட்டான்.

41)சங்கரனைப் போல் நற்குணமுடையவனை தன்னைப் போன்ற ஆணவக்காரனால் வெல்ல முடியாது என்பதே கிராமத்தலைவர் கற்றுக் கொண்ட பாடம் ஆகும்.